சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 11–ம் நாள் வாதி (பிரதிவாதி) சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – கணேசன் (Pw8 ) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

நான் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நான் மாயலேரி கிராம செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ 15**. சர்வே எண்.91/1ல் உள்ள ஏக்கர் 2 , செண்ட் 8 திருப்பதி சேர்வை என்பவர் பெயரில் உள்ளது. எனவே மேற்படி சர்வே எண்ணில் கண்ட சொத்தானது திருப்பதி சேர்வைக்கு பாத்தியமானது.

**<u>5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சர்வே எண்ணில் கண்ட சொத்தானது திருப்பதி சேர்வைக்கு பாத்தியம் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் நான்

**தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். உண்மையான பாத்திய விபரம் எனக்கு தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் தான் நான் சொல்கிறேன்.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 11-ம் நாள் வாதி (பிரதிவாதி) சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – பாலசுப்பிரமணியன் (Pw9 ) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுவிலக்கு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 36 ஆவணம் சார்பு ஆய்வாளர் நில அபகரிப்பு விருதுநகர் அவர்களுக்கு 2ம் வாதி அனுப்பிய கடிதம். மேற்படி கடிதத்தின் பின்புறம் அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ 33 ஆவணத்தின் படி விருதுநகர் மாவட்ட காவல் துறைகண்காணிப்பாளர் அவர்கள் மூலம் வாதிக்கு 21.09.2022 ல் அழைப்பாணை அனுப்பப்பட்டது. 02.03.2023ம் தேதி பாண்டி, சேகர் ஆகியோருக்கு விசாரணை அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

(சாட்சி ஆவணங்களின் உண்மை நகல் கொண்டு வர அவகாசம் கோரி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).